## ஏப்ரல் – 06 – சனி

### தூய செலஸ்தீன்

### “அவரைக்குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது” யோவா.7:43

## முதல் வாசகம் : ஏரேமியா 11: 18 - 20

”ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தினார் நானும் புரிந்து கொண்டேன். பின்னர் நீர் அவர்களின் செயல்களை எனக்குக் காட்டினீர். வெட்டுவதற்குக் கொண்டு செல்லப்படும் சாந்தமான செம்மறிபோல் இருந்தேன் அவர்கள் எனக்கு எதிராய், ”மரத்தைப் பழத்தோடு அழிப்போம் வாழ்வோரின் நாட்டிலிருந்து அவனை அகற்றிவிடுவோம் அவன் பெயர் மறக்கப்படட்டும்” என்று சொல்லிச் சதித்திட்டம் தீட்டியதை நான் அறியாதிருந்தேன். படைகளின் ஆண்டவரே, நீர் நேர்மையோடு தீர்ப்பிடுபவர் உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனைகளையும் சோதித்தறிபவர் நீர் அவர்களைப் பழிவாங்குவதை நான் காணவேண்டும். ஏனெனில், என் வழக்கை உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன்.

**பதில்பாடல்:** ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.

## நற்செய்தி : யோவான் 7 : 40 – 53

அக்காலத்தில் யூதர்களின் திருவிழாக் கூட்டத்தில் சிலர் இவ்வார்த்தைகளைக் கேட்டு, ”வரவேண்டிய இறைவாக்கினர் உண்மையில் இவரே” என்றனர். வேறு சிலர், ”மெசியா இவரே” என்றனர். மற்றும் சிலர், ”கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்?

தாவீதின் மரபிலிருந்தும் அவர் குடியிருந்த பெத்லகேம் ஊரிலிருந்தும் மெசியா வருவார் என்றல்லவா மறைநூல் கூறுகிறது?” என்றனர். இப்படி அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது. சிலர் அவரைப் பிடிக்க விரும்பினர். ஆனால் யாரும் அவரைத் தொடவில்லை. தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் அனுப்பியிருந்த காவலர்கள் அவர்களிடம் திரும்பி வந்தார்கள். அவர்கள் காவலர்களிடம், ”ஏன் அவனைப் பிடித்துக்கொண்டு வரவில்லை?” என்று கேட்டார்கள். காவலர் மறுமொழியாக, ”அவரைப்போல எவரும் என்றுமே பேசியதில்லை” என்றனர். பரிசேயர் அவர்களைப் பார்த்து, ”நீங்களும் ஏமாந்து போனீர்களோ? தலைவர்களிலாவது பரிசேயர்களிலாவது அவனை நம்புவோர் யாராவது உண்டா?. இம்மக்கள் கூட்டத்துக்குத் திருச்சட்டம் தெரியாது. இவர்கள் சபிக்கப்பட்டவர்கள்” என்றனர். அங்கிருந்த பரிசேயருள் ஒருவர் நிக்கதேம். அவரே முன்பு ஒரு நாள் இயேசுவிடம் வந்தவர். அவர் அவர்களிடம், ”ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா?” என்று கேட்டார். அவர்கள் மறுமொழியாக, ”நீரும் கலிலேயரா என்ன? மறைநூலைத் துருவி ஆய்ந்து பாரும். அப்போது கலிலேயாவிலிருந்து இறைவாக்கினர் யாரும் தோன்றுவதில்லை என்பதை அறிந்துகொள்வீர்” என்றார்கள். (அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்குச் சென்றார்கள்.).

**தியானம்:** இயேசுவை எப்படியாவது கொலை செய்ய வேண்டும் என்று திட்டம்போட்டுக் கொண்டிருந்தவர்கள், இயேசுவினுடைய எதிரிகளாக கருதப்பட்டவர்கள் யார் என்றால், எருசலேம் தேவாலயத்தில் கடவுள் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சதுசேயர்களும், பரிசேயர்களும், மறைநூல் அறிஞர்களும், தலைமைக்குருக்களும்தான். அழிக்கும் சாத்தானுடைய வேலையைச் செய்யும் மனிதர்கள் கடவுளின் பெயரிலே கோவிலிலே இருக்கின்றார்கள். இதுதான் வாழ்க்கையில் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் முரண்பாடு. கடவுளை எனக்குத் தெரியும், மறைநூல் எனக்குத் தெரியும் என்று சொல்வதால் மட்டுமே நாம் சாத்தானுடைய கண்ணியிலிருந்து விடுபட்டுவிட்டோம் என்று சொல்ல முடியாது மாறாக எதார்த்தங்களைக் கண்டுகொண்டு கடவுளின் திட்டத்தை ஒவ்வொருநாளும் தியானிக்கின்ற திறந்த மனதுடைய மனிதர்களாலேயே இயேசுவை தங்கள் வாழ்வில் அடையாளம் கண்டுகொள்ள முடியும். கல்வி அறிவற்ற, நாகரீகமற்ற, முரட்டுக் குணம் கொண்ட கலிலேயாவிலிருந்து மெசியா வரமுடியுமா? என்ற முற்சார்பு எண்ணங்களால் நிரப்பப்பட்ட பரிசேயர்களும், சதுசேயர்களும் இயேசுவைக் குறித்து கேள்வி எழுப்புகின்றனர். எனவே உண்மையான மெசியாவை அவர்கள் கண்டுகொள்ள மறந்தது மட்டுமல்ல அவரையே கொலை செய்யக்கூடிய கொடூர மனிதர்களாக மாறிப்போகிறார்கள். நமது முற்சார்பு எண்ணங்கள், ஒரு மனிதரைப்பற்றிய தீர்ப்புக்கள் அவரை தவறாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கின்றது. மேலும் அவரைப்பற்றிய நம்முடைய கருத்துப்பரப்புரைகள் அவருடைய மனதை, அவருடைய பெயரை அவருடைய வாழ்வுநெறியை கொலை செய்கின்றது. ஒரு மனிதர் எப்படிப்பட்டவர் என்பதை அவரோடு கொண்ட தனிப்பட்ட அனுபவத்தின் வழியாக கண்டுகொள்ளப்பட வேண்டுமே தவிர நாம் கேள்விப்படுகின்ற அல்லது அவரைப்பற்றி சொல்லப்படுகின்ற கருத்துக்களை வைத்து தீர்மானிக்கக் கூடாது. தீர்ப்பிடாதீர்கள் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள் என்று இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றார். வாழ்வுக்கு ஊற்றான இறைவனை நீங்கள் கொன்று போட்டீர்கள் என்று பேதுரு தனது முதல் உரையிலே மக்களைப் பார்த்து சொல்கிறார். ஆம் வாழ்வுக்கு ஊற்றான இறைவனை நாம் ஒவ்வொருநாளும் நம்முடைய தவறான புரிதல்களால், தவறான விமர்சனங்களால் கொன்று கொண்டிருக்கின்றோம். கடவுள் அன்பே உருவானவர் அவருடைய இரக்கம் ஒவ்வொருநாளும் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அந்த இறைவனின் இரக்கம் நம்மை இன்றும் வாழ்வித்துக் கொண்டிருக்கின்றது. கடவுளின் அன்பை இரக்கத்தை அனுபவித்த நாம் எப்படி நடந்து கொள்ளுகின்றோம்? கடவுள் நம்மை தீர்ப்பிட ஆரம்பித்தால் யாரும் அவருக்கு முன்னால் நிலைத்திருக்க முடியுமா? எனவே மனிதர்களை இருப்பதுபோல் ஏற்றுக்கொண்டு இதயத்தால் அன்பு செய்து அவர்களை தீர்ப்பிடாமல் புரிந்துகொள்ள இறைவனிடம் மன்றாடுவோம்.